[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2019 ஜூலை 8

5. கொடைக்கானலில் உள்ள அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தில் 10 வகுப்பறைக் கட்டடங்கள், கருத்தரங்குக்கூடம் மற்றும் பொது கருவிமயமாக்கல் ஆய்வுக்கூடம், சுற்றுச்சுவர், துணை வேந்தர், பதிவாளர், தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர், நிதி அலுவலர் மற்றும் கல்வி சார் பணியாளர்களுக்கான குடியிருப்புகள் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

6. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சிகளை உலகத் தரத்திற்கு மேம்படுத்த அதி நவீன உபகரணங்களுடன்கூடிய ஒரு மையம் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

7. பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த, பல்கலைக்கழக அறிவியல் கருவிமயமாக்கல் மையம் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

பிற்பகல் 12–10

(இ) சென்னையில் இரண்டு எரிவாயு சுழலி மின் நிலையங்கள் அமைத்தல், துணை மின் நிலையங்கள் அமைத்தல், ஊரக மின்னூட்டிகளில் உயர் மின்னழுத்த விநியோக அமைப்பு நிறுவுதல், டெல்டா மாவட்டங்களில் புதைவட மின்பாதைகள் அமைத்தல், வடசென்னை அனல்மின் நிலையம் நிலை III–க்கு உதவிப் பொறியாளர் பதவிகள் உருவாக்குதல் உள்ளிட்ட எரிசக்தித் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1. அதிகரித்துவரும் மின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையிலும், மின் கட்டமைப்பு மேலும் பல ஆண்டுகள் வலுவாக இருப்பதை உறுதி செய்யும் வகையிலும், சென்னையில் தலா 730 மெகா வாட் மின் உற்பத்தித் திறனுள்ள இரண்டு கூட்டு சுழற்சி முறையிலான எரிவாயு சுழலி மின் நிலையங்கள், சுமார் 5 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) முதற்கட்டமாக, இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

2. மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பைக் கருத்திற்கொண்டும், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும்பொருட்டும், தற்பொழுது இயக்கத்தில் உள்ள ஐந்து அனல் மின் நிலையங்களிலிருந்து வெளியேறும் கழிவுகள் மற்றும் தூசுகள் காற்றில் கலப்பதைக் கட்டுப்படுத்த, 3,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய உபகரணங்கள் நிறுவப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம், நாமக்கல் மாவட்டம், நல்லூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி ஆகிய 3 இடங்களில் 230 கி.வோ. புதிய துணை மின் நிலையங்கள் 510 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த ஆண்டு அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. சென்னை மாவட்டம், ஏ.ஆர்.எஸ். கார்டன், தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு, விழுப்புரம் மாவட்டம், பூத்தமேடு, பெரம்பலூர் மாவட்டம், கைகளத்தூர், கோயம்புத்தூர் மாவட்டம், செங்கத்துறை மற்றும் சேலம் மாவட்டம், ஆடையூர் ஆகிய 6 இடங்களில் இந்த ஆண்டு 110 கி.வோ. புதிய துணை மின் நிலையங்கள், 135 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5. மின் கட்டமைப்பை வலுப்படுத்த, 380 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 47 இடங்களில் புதிய 33/11 கி.வோ. துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும். மேலும், செயல்பாட்டில் இருக்கும் 33/11 கி.வோ. துணை மின் நிலையங்களில் 69 மின்மாற்றிகள் கூடுதலாகவும், திறன் உயர்த்தியும் நிறுவப்படும்.

6. மின் கட்டமைப்பில் மின்னழுத்தம் சீராக இருக்கவும், சராசரி தொழில்நுட்ப மற்றும் வணிக இழப்பீட்டைக் குறைப்பதற்காகவும் 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 50 ஊரக மின்னூட்டிகளில் உயர் மின்னழுத்த விநியோக அமைப்பு நிறுவுவதன்மூலம் உயரழுத்தம் மற்றும் தாழ்வழுத்தத்திற்கான நீள இடைவெளி விகிதாச்சாரம் குறைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

7. நாகப்பட்டினம், திருவாரூர் உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் இயற்கைச் சீற்றங்களின்போது, மின் கம்பங்கள் சாய்ந்து அதனால் மின் விநியோகம் தடையாகும் சூழ்நிலை உருவாகிறது. இந்நிலையைக் களைந்து, சீரான மின் விநியோகத்தை உறுதி செய்ய 33 கி.வோ. துணை மின் நிலையங்களுக்கு மின்சாரம் கொண்டு செல்லும் மின் பாதைகளில் முதற்கட்டமாக சுமார்

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2019 ஜூலை 8

100 கி.மீ. மின் பாதை ரூ.300 கோடி மதிப்பீட்டில் புதைவடங்களாக மாற்றப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

8. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தில் உள்ள 250 உதவிப் பொறியாளர் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும். மேலும், இந்த நிதியாண்டிலிருந்து இயக்கப்படவிருக்கும் வடசென்னை அனல் மின் நிலையம் நிலை–III–க்காக 150 உதவிப் பொறியாளர் பதவிகள் உருவாக்கப்பட்டு, நேரடி பணி நியமனம்மூலம் நிரப்பப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

9. தமிழ்நாடு எரிசக்தி முகமைக்கு 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு சொந்தக் கட்டடம் கட்டப்படும். இது ஒரு, மாதிரி பசுமைக் கட்டடமாகத் திகழும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. பள்ளிக் கல்வித் துறை, உயர் கல்வித் துறை மற்றும் எரிசக்தித் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அமைதி, வளம், வளர்ச்சி' என்ற தாரக மந்திரத்தைத் தன் நெஞ்சிலே ஏந்தி, தமிழகத்திலே வாழ்ந்துகாட்டி, இன்றைக்கு நம் நெஞ்சங்களில் நிறைந்து வாழ்ந்து கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசைநோக்கி வணங்குகிறேன்.

'ஏழையாகப் பிறப்பதிலே தவறில்லை. ஆனால், ஏழையாகவே இறப்பதுதான் தவறு' என்ற தத்துவத்தை நிறைவேற்றுகின்ற வகையில், கல்விக்காக இவ்வளவு கோடி நிதியை ஒதுக்கியிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எனது கோடானு கோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்றேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)